குடியரசு துணைத் தலைவருடன் சந்திப்பு...



புது தில்லியில் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனை அவரது இல்லத்தில் வெள்ளிக்கிழமை சந்தித்த தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர்.

தன்தேரஸ் திருநாள்: பிரதமர் மோடி வாழ்த்து



புது தில்லி, நவ. 6: தீபாவளி கொண்டாட்டங்களையொட்டிய தன்தேரஸ் திருநாளையொட்டி, நாட்டு மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வெள்ளிக்கிழமை வாழ்த்து தெரிவித்தார்.

வட இந்தியாவில் தீபாவளி பண்டிகை 5 நாள்கள் கொண்டாடப்படுகிறது. தன்தேரஸுடன் தொடங்கும் இக்கொண்டாட்டங்கள், அடுத்தடுத்த நாள்களில் நரக சதுர்த்தசி, தீபாவளி, கோவர்தன் பூஜை, பாய் தூஜ் என்ற பெயரில் நடைபெறும்.

தன திரயோதசி எனப்படும் தன்தேரஸ் திருநாள், செல்வத்தின் கடவுள் லட்சுமியை வரவேற்பதாகும். வட இந்தியாவில் இந்நாளில் தங்கம், வெள்ளி, பித்தளை பொருள்கள் மற்றும் புதிய சமையல் பாத்திரங்களை வாங்குவது வழக்கம். மருத்துவக் கடவுளான பகவான் தன்வந்தரி ஜெயந்தியையும் இந்த நாள் குறிக்கிறது.

தன்தேரஸ் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்ட நிலையில், நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்து, பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது:

தன்தேரஸ் திருநாளில் நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது எல்லையற்ற வாழ்த்துகள். பகவான் தன்வந்தரியின் தெய்வீக அருளால் மகிழ்ச்சி, அமைதி, நல்ல ஆரோக்கியத்துடன் ஒவ்வொருவரின் வாழ்வும் எப்போதும் ஒளிரட்டும்.

ஒவ்வொரு குடும்பங்களிலும் மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்தின் அணையா விளக்கு சுடர்விட்டு பிரகாசிக்கட்டும்.

உடல் நலனுக்கு உகந்த உணவுகளை உண்பது, தவறாமல் யோகா பயிற்சி மேற்கொள்வது, போதுமான தூக்கம், சரியான நேரங்களில் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வது போன்ற ஆரோக்கியமான பழக்கவழக்கங்களை அனைத்து குடும்பங்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேலும், அன்புக்குரியவர்களின் ஆரோக்கியமான எதிர்காலம் மற்றும் உடல் நலனில் முதலீடு செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், சுகாதார வசதிகளில் முதலீடு செய்வது குறித்து மத்திய அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் எழுதிய கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

தன்தேரஸ் தினம்...



தன்தேரஸ் என்னும் தனதிரயோதசி தினமான வெள்ளிக்கிழமை பஞ்சாப் மாநிலம் அமிருதசரஸில் நகை வாங்க வந்த பெண்கள். செல்வம், ஆரோக்கியம் பெருகுவதைக் குறிக்கும் தனதிரயோதசி தினத்தில் இல்லங்களுக்குப் புதிய பொருள்கள், தங்க நகை வாங்குவதை வட இந்தியாவில் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

தடையற்ற சுங்கக் கட்டண வசூல்: என்ஹெச்ஏஐ வழிகாட்டுதல் வெளியீடு

புது தில்லி, நவ. 6: நான்குவழி மற்றும் அதற்கு மேற்பட்ட வழிகள் கொண்ட தேசிய நெடுஞ்சாலைகளில் தடைகள் இல்லாத, தொழில்நுட்ப அடிப்படையிலான, எளிமையான சுங்கக் கட்டண வசூல் முறையின் (பன்முக வழித்தட தடையற்ற போக்குவரத்து) வடிவமைப்பு மற்றும் உள்கட்டமைப்புக்கான வழிகாட்டுதல்களை இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் (என்ஹெச்ஏஐ) வெளியிட்டுள்ளது.

சுங்கச் சாவடிகளில் வாகனங்கள் நிறுத்தப்பட தேவையின்றி, பன்முக வழித்தட தடையற்ற போக்குவரத்து (எம்எல்எஃப்எஃப்) அடிப்படையிலான சுங்கக் கட்டண வசூலை ஆதரிக்கும் வகையில், தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை இந்த வழிகாட்டுதல்கள் உறுதி செய்யும் என்று என்ஹெச்ஏஐ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சுங்கச் சாவடிகளில் போக்குவரத்து நெரிசல், காத்திருப்பு நேரம் மற்றும் எரிபொருள் பயன்பாட்டை குறைப்பதுடன், தேசிய நெடுஞ்சாலைப் பயணங்களை பாதுகாப்பானதாகவும், இடையூறுகளற்றதாகவும் மாற்றும் நோக்கில் இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, சுங்கச்சாவடி தள அமைப்புகள், வழித்தட அமைப்புகள், அறிவிப்பு பலகைகள், சாலை உள்கட்டமைப்பு, மின் விளக்குகள், அடையாளப் பலகைகள், சாலை பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் துணை வசதிகளுக்கான சீரான தேவைகள் குறித்து விரிவாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டுதல்கள், தற்போதைய மற்றும் எதிர்கால தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு பொருந்தும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஸ்ஐஆர்: 7 மாநிலங்களில் பெயர் விடுபட்டவர்களுக்கு வாய்ப்பு

புது தில்லி, நவ.6: சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) நடவடிக்கையின்கீழ் வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்களுக்குப் புதிய வாய்ப்பு வழங்கப்படுவதாக இந்தியத் தேர்தல் ஆணையம் வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

இது தொடர்பாக தில்லி, மகாராஷ்டிரம், ஹரியாணா, ஆந்திரம், ஜார்க்கண்ட், தெலங்கானா, நாகாலாந்து ஆகிய மாநிலங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு (சிஇஓ) தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்தது.

பாஜகவின் தூண்டுதலின் பேரில் தகுதி வாய்ந்த பல கோடி வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து தேர்தல் ஆணையம் நீக்கியதாகவும் வாக்குத் திருட்டு குற்றச்சாட்டில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சார்பில் போராட்டம் நடைபெற்ற நிலையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையம்

தேர்தல் ஆணையம் பிறப்பித்த உத்தரவில், 'எஸ்ஐஆர் நடவடிக்கையின்கீழ் இல்லாதவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், இறந்தவர்கள் மற்றும் போலி வாக்காளர்கள் என குறிப்பிடப்பட்டு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்களின் பெயர்களை மீண்டும் சேர்க்க புதிய வாய்ப்பு வழங்கப்படுகிறது.

அதன்படி விடுபட்ட வாக்காளர்களின் வீடுகளுக்குச் செல்வது, வாட்ஸ்ஆப், குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் அனுப்புவது என அவர்களை தொடர்புகொள்ளும் பணிகளை வாக்குச்சாவடி அலுவலர்கள் தொடங்க வேண்டும்.

இடம்பெயராத வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டபோது ஏன் இந்த தகவல்களை சமர்ப்பிக்கவில்லை என்பதை குறிப்பிட்டு விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து தர வேண்டும்.

மாநிலத்துக்குள் இடம்பெயர்ந்த வாக்காளர்கள் படிவம் 8-ஐ பூர்த்தி செய்யத் தேவையில்லை. ஆனால் தங்களது புதிய முகவரி, பேரவைத் தொகுதியை குறிப்பிட்டு உரிய ஆதாரங்களுடன் விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்க வேண்டும்.

முகவரி இல்லாத வீடற்ற வாக்காளர்களாக இருக்கும்பட்சத்தில் வாக்குச்சாவடி அலுவலர்களின் சரிபார்ப்பு அறிக்கையே வசிப்பிட ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்படும்.

பெயர் விடுபட்ட வாக்காளர்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை வாக்காளர் பதிவு விதிகள், 1960 விதி 21 (1)-இன்கீழ் வாக்காளர் பதிவு அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்வார்கள். அதன் பிறகு ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள், எஸ்ஐஆர் இறுதி பட்டியலில் சேர்க்கப்படும். அவ்வாறு சேர்க்கப்பட்ட வாக்காளர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண்களே செல்லும்.

ஏற்கெனவே படிவம் 6-ஐ சமர்ப்பித்த வாக்காளர்கள் மீண்டும் புதிதாக விண்ணப்பிக்கத் தேவையில்லை' எனத் தெரிவிக்கப்பட்டது.

தவறை ஒப்புக்கொண்ட தேர்தல் ஆணையம்: காங்கிரஸ்

எஸ்ஐஆர் நடவடிக்கையின்கீழ் கோடிக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டது தவறு என்பதை மிகவும் தாமதமாக தேர்தல் ஆணையம் ஒப்புக்கொண்டுள்ளதென காங்கிரஸ் வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

இது தொடர்பாக காங்கிரஸ் பொதுச்செயலர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'தற்போது எஸ்ஐஆர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் 7 மாநிலங்களில் விடுபட்ட வாக்காளர்களின் பெயர்களை சேர்ப்பதற்கான உத்தரவை தேர்தல் ஆணையம் பிறப்பித்து தனது தவறை மிகவும் தாமதமாக ஒப்புக்கொண்டுள்ளது.

13 கோடி இந்தியர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் நடத்திய போராட்டத்தின் எதிரொலியாக இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



எஸ்ஐஆர் தொடர்பாக வெளியாகும் ஒவ்வொரு புதிய உத்தரவும் இந்தியர்கள் எதிர்கொண்ட இடையூறுகளுக்கு என்ன தீர்வைத் தரும்? எஸ்ஐஆர் என்பது வாக்குத் திருட்டின் வடிவம். வாக்குத் திருட்டில் ஈடுபட்ட தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா என அனைவரும் சிக்கிக்கொண்டனர்.

ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும். எஸ்ஐஆருக்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும்' என குறிப்பிட்டார்.

நலத் திட்ட பயனாளிகளுக்கு ஆதாருக்கு பதில் வாக்காளர் அட்டை

புது தில்லி, நவ. 6: சமூக நலத் திட்ட பயனாளிகளைத் தீர்மானிக்க ஆதாருக்கு பதில் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை பயன்படுத்தப்படும் என்ற மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங்கின் கருத்துக்கு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

'இது வாக்குத் திருட்டு மட்டுமல்ல, உரிமைத் திருட்டு' என்று அவர் சாடியுள்ளார்.

மத்திய உள்ளாட்சித் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் (எ) லாலன் சிங், தனது அமைச்சகத்தின்கீழ் செயல்படும் சமூக நலத் திட்டங்களின் நிதி பலன்களைப் பெறுவதற்கு கட்டாய பயோமெட்ரிக் சரிபார்ப்புடன் ஆதாருக்கு பதிலாக புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை பயன்படுத்தப்படும் என்று சில தினங்களுக்கு முன் கூறியிருந்தார். அவரது இந்த

மத்திய அரசு மீது ராகுல் சாடல்

பேச்சு அடங்கிய காணொலியை எக்ஸ் தளத்தில் பகிர்ந்து, ராகுல் காந்தி வெள்ளிக்கிழமை வெளியிட்ட எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது:

அரசின் நலத் திட்ட பயனாளிகள் ஆதாருக்கு பதிலாக வாக்காளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்படுவர் என்ற மத்திய அமைச்சரின் கருத்து மோடி அரசின் ஆழமான சதித்திட்டமாகும்.



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) என்ற பெயரில் வாக்காளர் பட்டியல்களில் இருந்து கோடிக்கணக்கானோரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இதைத் தடுத்து நிறுத்தாவிட்டால், இன்னும் ஏராளமானோர் பெயர் நீக்கப்படும்.

எஸ்ஐஆரில் யாருடைய பெயர்கள் அதிகம் குறிவைக்கப்படுகின்றன? பாஜக ஆட்சி முடிவுக்கு வர வேண்டும்என நினைப்பவர்களின் பெயர்கள் நீக்கப்படுகின்றன.

கூட்டுச் சதி அம்பலம்: நாட்டின் வாக்காளர் பட்டியல், பாரபட்சமில்லாத தேர்தல் ஆணையத்தின் கைகளில் இருக்க வேண்டும். ஆனால், மோடி அரசின் கைப்பாவையாக செயல்படும் ஞானேஷ் குமாரின் கையில் அது இருக்கிறது. 'வாக்குத் திருட்டில்' பாஜக உடனான அவரது கூட்டுச் சதியை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியுள்ளோம்.

பாஜக ஆதரவாளர்கள் பெரும்பான்மையாக இருக்கும் வகையில் தயாரிக்கப்படும் வாக்காளர் பட்டியல்தான், இனி அரசு திட்டப் பலன்களைத் தீர்மானிக்க உள்ளது.

பெயர் நீக்கம் மூலம் வாக்குரிமை மட்டுமன்றி பிற உரிமைகளும் பறிக்கப்படுகின்றன. 'அபகரிக்கப்பட்ட' ஜனநாயகத்தில் கண்ணுக்கு புலப்படாதவர்களாக மக்கள் மாறிவிடுவர். இன்று உள்ளாட்சித் துறை திட்டங்கள், நாளை ரேஷன் பொருள், ஓய்வூதியம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், உதவித் தொகை, இடஒதுக்கீட்டுக்கும் இதே நிலை ஏற்படும். தேர்தலை திருடி, ஆட்சி அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டிருப்பதற்கான நிரந்தர ஏற்பாடுதான் இது. ஏழைகளுக்கான நிதி பலன்கள், வாக்காளர் அடையாள அட்டை மூலம் நிர்ணயிக்கப்பட கூடாது. இதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்று ராகுல் குறிப்பிட்டுள்ளார்.

தே.ஜ. கூட்டணிக்காக சோனியா வாக்குத் திருட்டில் ஈடுபட்டாரா?

பாஜக கிண்டலாக கேள்வி



'தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை விட முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் நியமிக்கப்பட்ட முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் வி.எஸ்.சம்பத் பதவிக் காலத்தில்தான், தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் வெற்றி விகிதம் அதிகமாக இருந்தது; அப்படியென்றால், தேசிய ஜனநாயக கூட்டணிக்காக காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி 'வாக்குத் திருட்டில்' ஈடுபட்டாரா' என்று பாஜக கிண்டலாக கேள்வியெழுப்பியுள்ளது.

நாட்டின் 18-ஆவது தலைமைத் தேர்தல் ஆணையராக வி.எஸ்.சம்பத் கடந்த 2012, ஜூன் 11 முதல் 2015, ஜனவரி 15 வரை பதவி வகித்தார். இதைக் குறிப்பிட்டு, பாஜக செய்தித் தொடர்பாளர் பிரதீப் பண்டாரி வெளியிட்ட எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது:

முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் தலைமைத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்ட வி.எஸ்.சம்பத் பதவிக் காலத்தில் நடத்தப்பட்ட தேர்தல்களில் தேசிய ஜனநாயக கூட்டணி 75 சதவீத வெற்றிகளை ஈட்டியது. தற்போது ஞானேஷ் குமாரின் பதவிக் காலத்தில் இது 66 சதவீதமாக உள்ளது.

வி.எஸ்.சம்பத் பதவிக்காலத்தை ஒப்பிடுகையில், பாஜக கூட்டணியின் வெற்றி விகிதம் தற்போது குறைவுதான். ராகுலின் 'அபாரமான' மூளையின்படி பார்த்தால், பாஜக கூட்டணிக்காக சோனியா காந்தி வாக்குத் திருட்டில் ஈடுபட்டரா என்று பிரதீப் பண்டாரி கேள்வியெழுப்பினார்.

SBI பாரத ஸ்டேட் வங்கி
ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை- II
எண்.44, முதல் தளம், எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018.
மின்னஞ்சல் முகவரி: sbi.70674@sbi.co.in

அதிகாரபூர்வ அலுவலர் விவரங்கள்: பெயர்: திரு. கைலாஷ் சந்திர மீனா, போன் : 044-24338112 / 8699009584
தொடர்புக்கு: நகர வழக்கு அலுவலர் : பெயர்: திரு. S. மதியழகன் – மொபைல் : 6381445907

அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு. (8(6) விதியை காண்க)

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை அதிகாரப்பூர்வ அதிகாரி, பாரத ஸ்டேட் வங்கி, அவர்களால் கீழ்குறிப்பிட்டுள்ள சுவாதீனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. சென்னை பாரத ஸ்டேட் வங்கி, SARB-II கிளைக்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பாக்கித்தொகையினை வசூலிக்கும் பொருட்டும் சொத்தானது "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" மற்றும் "என்ன உள்ளதோ அப்படியே" எனும் அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யப்படவிருக்கிறது.

கடன்தாரர் / ஜாமீன்தாரரின் பெயர்: திருமதி. வனிதா, க/பெ. திரு. சுதாகர் பாபு.K (இறந்தவர்), முகவரி 1: எண்.18- B, ரேகா நகர் 2வது தெரு, ரேகா குறுக்குத் தெரு, மாதவரம் பால் காலனி, சென்னை- 600 051, முகவரி 2: ARETE HOMES" எண்.1001, 10வது தளம், டவர் எண்.A-4, பெருஞ்சேரி கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம், சென்னை – 601204. முகவரி 3: எண்.20, பழைய எண்.7, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை–600011.

நிலுவைத் தொகை : 30.10.2026 அன்றுள்ளபடி ரூ.41,17,719.00 (ரூபாய் நாற்பத்து ஒரு லட்சத்து பதினேழாயிரத்து எழுநூற்று பத்தொன்பது மட்டும்) மேலும் எதிர்கால வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் உட்பட.

அசையா சொத்தின் விளக்கம் : வீட்டு சொத்து

மூல ஆவணதாரர் பெயர்: திருமதி.வனிதா: (24.06.2021 தேதியிட்ட விற்பனை ஆவண எண்.4343/2021 இன் கீழ் அடங்கியது) அட்டவணை -A : வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் பொன்னேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், தச்சூர்/பெருஞ்சேரி கிராமத்தின் சர்வே எண்கள்.22/1A, 22/1B,22/1C,22/1D (பகுதி), 22/1E (பகுதி), 23/2, 23/3A, 23/3B, 23/3C, 23/4A, 23/4B,23/5A1, 23/5A2, 23/5B, 23/5C, 23/6, 24/1, 24/2A (பகுதி), 24/4A1, 24/4A2, 24/4A3(பகுதி), 24/4A5(பகுதி), 25/2 (பகுதி), 26/1A(பகுதி), 26/2A, 26/2B(பகுதி) மற்றும் 26/2C ஆகியவற்றில் அடங்கிய சுமார் 6,56,671ச.அடி விஸ்தீரணமுள்ள நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, குறிப்பிட்ட நிலத்தின் எல்லைகள்: வடக்கில்: சர்வே எண்கள்.23/1, 11;26(பகுதி) மற்றும் 22/1B ஆகியவற்றில் உள்ள நிலங்கள்; தெற்கில்: பொன்னேரி சாலை மற்றும் இணைப்புச் சாலை மற்றும் OSR பரப்பு; கிழக்கில்: இணைப்புச் சாலை & OSR பரப்பு, சர்வே எண்கள்.11 (பகுதி), 26/2D மற்றும் 26/2E ஆகியவற்றில் உள்ள நிலங்கள்; மேற்கில்: இணைப்புச் சாலை மற்றும் சர்வே எண்.21 இல் உள்ள நிலங்கள். அட்டவணை -B (ஒதுக்கீடுசெய்யப்பட்டவருக்கு தெரிவிக்கப்பட்டு, ஒப்புக்கொண்ட நிலத்தில் பிரிக்கப்படாத பங்கின் விவரங்கள்) மேற்குறிப்பிட்ட அட்டவணை A இல் விவரிக்கப்பட்டுள்ள நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 286ச.அடி. அட்டவணை -C (அப்பார்ட்மெண்ட் விவரங்கள்) அட்டவணை A யில் விவரிக்கப்பட்டுள்ள நிலத்தில் எழுப்பப்பட்டுள்ள "Arete Homes" என்ற பெயரில் உள்ள கட்டிட வளாகத்தின் "Project" அதாவது ஃபேஸ் I இன் டவர் எண்.A4, பத்தாவது தளத்தில் உள்ள 641சதுர அடி தரைப்பரப்பு, 56ச.அடி பரப்புள்ள திறந்தவெளி மாடி கொண்ட குடியிருப்பு அப்பார்ட்மெண்ட் எண்.1001, அதனுடன் ஒரு (மூடிய) பதிவு செய்யப்பட்ட கார் நிறுத்தும் இடம். CERSAI: ASSET ID 200051759149 & SECURITY ID 400051763482.

சுவாதீன நிலை: மெய்நிலை

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 33,25,000/- | டேவணித்தொகை ₹ 3,32,500/- | ஏல உயர்வுத்தொகை ₹ 25,000/-

சொத்துகளைப் பார்வையிடும் தேதி: 13.11.2026 நேரம் : காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை.

மின் ஏலத் தேதி & நேரம்: 18.11.2026 நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்).

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதுமில்லை.
விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.baanknet.com/
கடன் வழங்கியவரான பாரத ஸ்டேட் வங்கியின் இணையதளமான www.sbi.co.in என்ற இணைப்பில் காணலாம்.

தேதி: 30.10.2026
இடம்: சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர், பாரத ஸ்டேட் வங்கி, SARB - II , சென்னை

बैंक ऑफ़ बड़ौदा பேங்க் ஆப் பரோடா India's International Bank 119
பிராந்திய அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB)
சென்னை ரூரல் ரீஜியன், எண்.123, மெஸ்ஸனைன் தளம், துகார் டவர்ஸ், RL சாலை, எழும்பூர், சென்னை - 600 008.
Phone: 044-28885428, E-mail: sarcmt@bankofbaroda.bank.in; Web: www.bankofbaroda.bank.in

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A மின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)
2002-ம்ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் விதிகளின் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் & முகவரி: கடன்தாரர் திருமதி தேவகி பூபதி, பழைய எண்.273, புதிய எண் 167, தர்மராஜா கோயில் தெரு, கீழ்ப்பாக்கம் கார்டன் சாலை, சென்னை, தமிழ்நாடு 600010. மேலும், திருமதி தேவகி பூபதி, உரிமையாளர் M/s Kay kay Mobile accessories and stationery, எண்.273, கீழ்ப்பாக்கம் கார்டன், சென்னை, தமிழ்நாடு 600010. திருமதி. தேவகி பூபதி, பிளாட் எண்.F2 முதல் தளம், பிளாக் B "கருடா அபார்ட்மெண்ட்ஸ்", சிற்பி நகர் பேஸ் II, கூடுவாஞ்சேரி 603202.

மொத்த நிலுவைத் தொகை: 31.10.2026 அன்றுள்ளபடி ரூ. 40,98,302.72/- மேலும் 31.10.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவினங்கள்.
சுவாதீனம் நிலை : மெய்நிலை

அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: தென்சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, நந்திவரம்-கூடுவாஞ்சேரி நகர ஊராட்சி எல்லைகளுக்குட்பட்ட கூடுவாஞ்சேரி கிராமம்-603202, இல் அடங்கிய பழைய சர்வே எண்.39/4 மற்றும் 39/4A, பட்டா எண்.2556 இன் படி புதிய சர்வே எண்.39/4A2, மேலும் நிர்வாக அதிகாரி (Executive Officer) அவர்களால் அனுமதிக்கப்பட்ட 22.07.2013 தேதியிட்ட எண்.119/2013-2014, 314/2013, 27.09.2013 தேதியிட்ட மனைபிரிவு துணைப்பிரிவு அனுமதி எண்.187/2013-2014, 536/2013. இன் படி சிற்பி நகர் பேஸ்-II, கருடா அப்பார்ட்மெண்ட், அதன் நிலத்தின் மொத்த விஸ்தீரணம் 3488 சதுர அடி (8 செண்ட்கள்) காலி வீட்டு மனை மற்றும் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி எல்லைகள், வடக்கில் சர்வே எண்.40 இன் உள்ள நிலம், தெற்கில் சிற்பி நகர் பேஸ் II இல் உள்ள மனை எண்.18, கிழக்கில் 23 அடி சாலை, மேற்கில் சர்வே எண்.39/4A, (திரு.டேனியல் அவரின் மீதமுள்ள சொத்துபகுதி) நாற்பரப்புகள் வடபுறம் 40 அடி, தென்புறம் 43 அடி, கிழக்குபுறம் 84 அடி, மேற்குபுறம் 81 அடி. அட்டவணை B சொத்து, (பத்திரத்தின்படி தெரிவிக்கப்பட்ட சொத்து), அட்டவணை A. சொத்தின் குறிப்பிட்டுள்ள 3488 சதுர அடி நிலத்தில் பிரிக்கபடாத பங்கு 344 சதுர அடி, அதனுடன் கருடா அப்பார்ட்மெண்ட்ஸ் என பெயரிடப்பட்ட அப்பார்ட்மெண்ட் - இன் பிளாக் B, முதல் தளத்தின் 898 சதுர அடி (பொதுப்பரப்பு உட்பட) பிளாட் எண்.F2. Latitude : 12.852119 N Longitude : 80.057223 E

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 27,70,000/- | டேவணித் தொகை ₹ 2,77,000/- | ஏல உயர்வு தொகை ₹ 25,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: 23.11.2026, மதியம் 01 மணி முதல் மாலை 5 மணி வரை
EMD தொகை செலுத்த கடைசி தேதி : 26-11-2026 அன்று பிற்பகல் 1.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக

மின் ஏல தேதி & நேரம்: 26.11.2026 அன்று மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை | வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்
விதிமுறைகள் & நிபந்தனைகளை அறிய இந்த க்யூஆர் செய்யவும்

மேலும் விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளமான https://bankofbaroda.bank.in/e-auction & ஆன்லைன் விற்பனைக்கான https://baanknet.com. இணையதள இணைப்பை பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியை தொலைபேசி: 044-28885428 எண்ணிலும் கைபேசி எண். 8940056367 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளவும்

தேதி : 05.11.2026;
இடம்: சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

IndusInd Bank
இன்டஸ்இண்ட் வங்கி லிமிடெட், புதிய எண். 34, பழைய எண். 115/116, 2வது தளம், G.N. செட்டி சாலை, தி.நகர், சென்னை-600017, தமிழ்நாடு, இந்தியா

தங்க ஏலத்துக்கான பொது அறிவிப்பு

இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், கீழ்க்காணும் கடன்தாரர்கள் மற்றும் பிறர் இன்டஸ்இண்ட் வங்கி லிமிடெட் நிறுவனத்திடமிருந்து தங்க நகைக் கடன் பெற்றுள்ளனர். கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதாலும் ஒப்பந்தத்தின் நெறிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை மீறியதாலும் இந்தக் கடனுக்காக அடகு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளைத் தற்பொழுது திறந்தநிலைப் பொது ஏலத்தில் விடத் திட்டமிட்டுள்ளோம். இந்த ஏல வருமானம் / ஏலத் தொகை அந்தந்தக் கடன்தாரரின் கடன் கணக்கு(கள்) மற்றும் தொடர்புடைய கடன் கணக்குகளில் வரவு வைக்கப்படும்.

அடகு வைக்கப்பட்டுள்ள இந்தத் தங்க நகைகள் "உள்ளது உள்ள இடத்தில், உள்ளது உள்ளபடி, உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் அடிப்படையில் ஏலம் விடப்படும். ஏலத்தில் கலந்து கொள்ள விரும்பும் ஏலதாரர்கள் கிளையைப் பார்வையிட வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள கிளை முகவரியில் ஏலம் நடத்தப்பட உள்ளது.

விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றுள் எதையும் திருத்த அல்லது மாற்ற அதிகாரப்பூர்வ அலுவலருக்கு முழு விருப்புரிமை உண்டு.

கணக்கு எண்	வாடிக்கையாளர் பெயர்	கிளைத் தொடர்பு எண்	நிகர எடை	கிளை
704001449881	பிரியங்கா நாடன் பண்டாரம்	9944244494	20.1	அடையாறு

கிளை முகவரி: பழைய எண் 20, புதிய எண் 58, 1ஆவது அவென்யூ, சாஸ்திரி நகர், அடையாறு, சென்னை-600020.

கணக்கு எண்	வாடிக்கையாளர் பெயர்	கிளைத் தொடர்பு எண்	நிகர எடை	கிளை
704001404767	பிரியங்கா நாடன் பண்டாரம்	8870091705	31.8	திருவான்மியூர்

கிளை முகவரி: இன்டஸ்இண்ட் வங்கி லிட்.,113/5, திருவள்ளுவர் சாலை, காமராஜ் நகர், திருவான்மியூர், சென்னை-600041.

கணக்கு எண்	வாடிக்கையாளர் பெயர்	கிளைத் தொடர்பு எண்	நிகர எடை	கிளை
704001482673	ஜெய்கிருஷ்ணன் R	9655452647	60.5	பல்லாவரம் பம்மல் பிரதான சாலை

கிளை முகவரி: இன்டஸ்இண்ட் வங்கி லிட்., மனை எண் 1B, அன்சாரி மஹால், பம்மல் பிரதான சாலை, பம்மல், சென்னை-600075.

கணக்கு எண்	வாடிக்கையாளர் பெயர்	கிளைத் தொடர்பு எண்	நிகர எடை	கிளை
704001442035	மதியழகன் M	7397349184	127.7	சேலையூர்

கிளை முகவரி: மகா சக்தி விநாயகர் காம்ப்ளெக்ஸ், பழைய எண் 231, புதிய எண் 384, வேளச்சேரி பிரதான சாலை, சேலையூர், சென்னை-600073.

கணக்கு எண்	வாடிக்கையாளர் பெயர்	கிளைத் தொடர்பு எண்	நிகர எடை	கிளை
704001475101/ 704001477044	S சிவராமன்	9840916030	95.8	P.H. சாலை

கிளை முகவரி: தரைத் தளம், புதிய எண் 192, பழைய எண் 879,P.H. சாலை, சென்னை-600084.

ஏல நாள் 10.12.2026 அன்று காலை 10.00 மணி முதல்.

நிலுவையில் உள்ள கடன் தொகையை முழுவதுமாகத் திருப்பிச் செலுத்த ஏலம் தொடங்குவதற்கு முன்பு வரையில் கடன்தாரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு தொகையைத் திருப்பிச் செலுத்தி, இன்டஸ்இண்ட் வங்கி லிட்., நிறுவனத்தின் விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க, அடகு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளைக் கடன்தாரர்கள் மீட்டுக் கொள்ளலாம்.

ஏலத்தில் பங்கேற்பதற்கு GST எண் கட்டாயம்.

நாள்: 07.11.2026
இடம்: சென்னை
அதிகாரப்பூர்வ கையொப்பதாரர் இன்டஸ்இண்ட் வங்கி லிட்.